1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கேள்விதான் ஏற்கனவே கேட்கப்பட்டது. அதற்கு நான் பதில் அளித்து விட்டேன்.

திரு ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, அரசு முடிவு செய்யும்பொழுது, ஏற்கெனவே 25 வயது ஆகிவிட்டது என்ற காரணத்தினாலே உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முடிவு எடுக்கிற நேரத்தில் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, வயதைக் கூட்டுவதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனாலே, ரிடைரிங் ஏஜ் ஏதாவது மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

Sale of liquor and toddy.

* 298 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to bring under the co-operative fold, the sale of liquor and toddy instead of the present system of auctioning of the shops; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, கடைகளை தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விடுவதன்மூலம் அதிகப்படியான லாபம் அவர்களுக்குக் கிடைக்கிறதே, அதை மாற்றி கூட்டுறவு முறையிலே அதை நடத்தினால் இன்னும் அதிகமான லாபம் சர்க்காருக்கு வருமே, அதை அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது இயலாத ஒன்று என்று எண்ணி அந்த முறையை மேற்சொள்ளவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு ஓராண்டு முடிந்து விட்டது. இந்த ஓராண்டிலே, மதுவிலக்கு ரத்தினாலே, இந்த மாநிலத்து மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற ஆராய்ச்சியை அரசு செய்துள்ளதா? இல்லையென்றால் ஆராய்ச்சி செய்ய உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சி ஆளுகின்ற மாராட்டியத்திலே மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறார்கள். அங்கு எப்படி வாழ்க்கைத்தரம் இருக்கிறதோ, அதைப் போல் தான் இங்கும் இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஹோல்சேல் ஏஜென்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றி, கோவாப்பரேட்டிவ் யூனியன்களுக்கு அந்த ஹோல்சேல் ஏஜென்சி கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

கள்ளக்குறிச்சிக்கு தீயணைப்பு நிலையம்

* 299 **வினா—திரு. ந. தருமலிங்கம்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சியில் தீயணைக்கும் நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) கள்ளக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிக்க கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) தீயணைப்பு நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடித்தவுடன் தீயணைப்பு நிலையம் இயங்கத் தொடங்கும்.

திரு. ந. தருமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா? எவ்வளவு மதிப்பீட்டில் தீயணைப்பு நிலையம் அமைக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.